சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :24.03.2025
வா.சா.1 – மலைச்சாமி S/o வீரணன்
OS No.247/2022 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

முருகேசனுக்கு நான் 5 லட்சம் ரூபாய் கிரையம் பேசி 4 லட்சம் ரூபாய் முன்பணம் கொடுத்தேன். 13.11.2019 அன்று கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டோம். ஒத்தக்கடை பத்திர ஆபிசில் வைத்து தான் 4 லட்சம் ரூபாயை ரொக்கமாக கொடுத்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்கு விவரங்கள் அனைத்தையும் வழக்கறிஞரிடம் நான் தான் கூறினேன். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் வழக்கறிஞரிடம் கொடுத்து படித்து தெரிந்து கொண்டேனா என்றால் அது நினைவில்லை. வழக்கு சொத்தின் சர்வே நம்பர் அரும்பனூர் பஞ்சாயத்து, ஆசிரியர் குடியிருப்பு சர்வே நம்பர் 105/8C ஆகும். வழக்கு சொத்தின் விஸ்திரணம் 7 செண்டு ஆகும் . வழக்கு சொத்தின் நான்குமால் பத்திரத்தை பார்த்தால் தான் கூறமுடியும் தற்போது நினைவில்லை. வழக்கு சொத்திற்கான மதிப்பு தற்போது என்ன என்றால் தற்போது எனக்கு தெரியவில்லை. நான் அங்கு செல்லவில்லை. வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பானது 13.11.2019 அன்று முன்தொகையாக 4 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு அன்றைய தினமே கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டு, ஒரு மாத காலம் அவகாசம் கொடுத்ததாக பத்திரத்தில் கண்டுள்ளதாக அறிவிப்பு கொடுத்துள்ளேன். 13.11.2019 அன்று கிரைய ஒப்பந்தம்பதிவு செய்யப்பட்டுள்ளதால் மீதத் தொகை கொடுக்க நான் தயாராக இருந்தும் பத்திரம் பதிவு செய்ய பிரதிவாதி வராத காரணத்தினால் வழக்கறிஞர் அறிவிப்பு நான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 13.11.2019 அன்று பத்திர அலுவலகத்திற்கு நான் செல்லவில்லை என்றும், 14.11.2019 அன்று தான் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எழுதியது

13.11.2019 பதிவு செய்யப்பட்டது 14.11.2019 ஆகும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 10வது தாளில் பின்புறத்தில் 06.02.2020 தேதியில் மேற்படி பத்திரத்தில் வாங்கியபணத்தில் அதிகபடியாக ரூபாய் 1 லட்சம் அவசர தேவைக்கு மேற்படியார் மலைச்சாமி அவர்களிடம் இருந்து முருகேசன் ஆகிய நான் பெற்றுக்கொண்டேன் என்றும், பணம் கொடுப்பவர், பணம் வாங்குபவர் என்ற இடத்தில் நானும், மலைச்சாமியும் கையெழுத்து செய்து அடிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. நான் அதை கவனிக்கவில்லை. சாட்சியிடம் அவருடைய வக்காலத்து காட்டப்பட்டு, அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று குறிப்பிடுகிறார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 10வது தாளில் பின்புறத்தில் எழுதப்பட்டு அடிக்கப்பட்ட விபரத்தை என்னுடைய பிராதிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் நினைவில்லை. 14.11.2019 அன்று தான் வா.சா.ஆ.2 பதிவு செய்யப்பட்டது என்ற விபரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராதிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் தெரியவில்லை, வழக்கறிஞரிடம் சொன்னேன். நான் என்னுடைய வழக்கில் எந்த இடத்திலும் கிரைய ஒப்பந்தமாக 13.11.2019 அன்று எழுதப்பட்டு, 14.11.2019 அன்று பதிவு செய்யப்பட்டதாக எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் தெரியவில்லை.

(சாட்சி எழுத்து தெரியவில்லை என்று கேட்டுக்கொண்டதன்பேரில் கண்ணாடியுடன் வரவேண்டும் என்று குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.03.24 17:53:20 +0530

Sub Judge

Melur